[1978 செப்டம்பர் 1

பஞ்சப்பள்ளியில் சிறுவர் சீர்திருத்தப் பள்ளி.

*வினா 39—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் பஞ்சப்பள்ளியில் சிறுவர் (குற்றவியல்) சீர்திருத்தப் பள்ளி ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) & (ஆ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள பஞ்சப்பள்ளியில் புதிதாக சிறுவர் (குற்றவியல்) சீர்திருத்தப் பள்ளி திறக்கும் உத்தேசம் இல்லை.

எனினும், கடலூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அரசு இளநிலை சீர்திருத்தப் பள்ளியை பஞ்சப்பள்ளியில் உள்ள வசதியுடன் கூடிய அரசாங்கக் கட்டடத்திற்கு மாற்றும் திட்டம் இருந்தது. அதன்படி 13—10—76-ல் உத்திரவிடப்பட்டது. பொதுப்பணித் துறை இக் கட்டடத்தை காலி செய்து கொடுக்காததால் மேற்குறித்த இடமாற்றம் இன்னும் செய்யப்படவில்லை.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களின் பதிலிலிருந்து அங்கே சிறுவர் சீர்திருத்தப் பள்ளி ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு இருப்பதாக அறிகிறேன். பொதுப்பணித் துறை இடைஞ்சலாக இருப்பதால் உடனடியாக அதனை நிவர்த்தி செய்து அந்தப் பள்ளியை விரைவில் அங்கே ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவரவர்களே, பஞ்சப்பள்ளி கிராமத்தில் சீர்திருத்தப் பள்ளி துவக்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற கட்டடத்தில் தற்போது பொதுப்பணித் துறை அலுவலகம் நடைபெறுவதால் அந்தக் கட்டடத்தை சீர்திருத்தப் பள்ளிக்கு ஒப்படைக்க முடியாது என்று அங்குள்ள நிர்வாகப் பொறியாளர் தெரிவித்துள்ள விவரம் தலைமைப் பொறியாளர் மூலமாக இந்தத் துறைக்குத் தெரியப்படுத்தி இருப்பதால் தற்போது சீர்திருத்தப் பள்ளியை மாற்றும் திட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS